செய்தி வெளியீடு எண்– 807 நாள். 28.9.2008

## செய்தி வெளியீடு

## குடும்ப அட்டைதாரர்களுக்குரிய பொருட்களை மற்றவர்கள் வாங்கவோ, இருப்பு வைக்கவோ கூடாது.

### மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் அறிவிப்பு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறையின் சென்னை, திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், திருச்சி, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் பிரிவுகளின் செயல்பாடுகள் தொடர்பாக மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் தலைமைச் செயலகத்தில் இன்று (28.09.2008) காலை 10.00 மணிக்கு ஆய்வுப் பணி மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறையின் காவல்துறை கண்காணிப்பாளர்கள், துணை கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள், ஆகியோர் பங்கு பெற்றனர்.

மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் ஆய்வுக் கூட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றுகையில், அரசு ஏழை எளிய மக்கள் பசி பட்டினியின்றி வாழ வேண்டும் என்ற நோக்கத்துடன் ரூ.1,950 கோடி உணவு மானியமாக செலவு செய்து பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்துகிறது. அரிசி மற்றும் மண்ணெண்ணெய் தேவையில்லை என்று கருதுபவர்கள், அவர்களுக்கு தேவையான பொருட்களை மட்டுமே நியாயவிலைக் கடைகளில் வாங்க வேண்டும்.

குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறை அலுவலர்கள் அத்தியாவசியப் பொருட்களை கைபற்றி பல மாதங்கள் கழித்து தான் மகஜர் தயாரித்து அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955 பிரிவு 6(a)ன் கீழ்

நடவடிக்கை எடுக்க அனுப்புகிறார்கள். இத்தகைய பணிகளில் காலதாமதம் ஏற்படாமல் காவல்துறை கண்காணிப்பாளர்களும், துணை கண்காணிப்பாளர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

2008ம் ஆண்டில் சென்னையில் உணவுப்பொருள் வழங்கல் துறை அலுவலர்கள் 6,327 குவிண்டால் அரிசியையும், 17,271 லிட்டர் மண்ணெண்ணெண்ணையும் கைப்பற்றியுள்ளார்கள். குடிமைபொருள் குற்றப்புலனாய்வுத் துறையினரால் 4,618 குவிண்டால் அரிசியும், 12,775 லிட்டர் மண்ணெண்ணெயும் தான் கைப்பற்றப்பட்டுள்ளது. இத்துறையில் பணிபுரியும் காவல்துறை ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்களின் பணி பாராட்டத்தக்க வகையில் அமைய வேண்டும் என்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆய்வின்போது ஒவ்வொரு அலுவலர்களும் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் ஆணைகளை நிறைவேற்றுவதாக உறுதி அளித்தார்கள்.

இதுவரை கள்ளச்சந்தை தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் 94 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டும், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டும், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 275 வாகனங்களின் உரிமமும், 162 ஓட்டுநர்களின் உரிமமும் ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2004ம் ஆண்டு முதல் தொடர்ந்து அரிசி கடத்தலில் ஈடுபட்டு வந்த 41 தலைமறைவு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஒவ்வொரு வட்டத்திலும் அரிசி கடத்தலில் ஈடுபடுபவர்கள் எனக் கருதப்படுபவர்களை பற்றியும் கடத்தல் முறைகளையும் ரகசிய விசாரணை செய்து அவர்களுடைய செயல்களை கண்காணித்து அத்தகைய குற்றவாளிகளையும், அவர்களோடு தொடர்புடைய அனைவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். கடத்தல் அரிசியை மட்டும்

கைப்பற்றுவது போதாது. அவர்கள் செய்யும் குற்றத்திற்காக இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் (**Essential Commodities Act, 1955**) குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், கள்ளச்சந்தை தடுப்புக்காவல் சட்டத்தின் (**Prevention of Black Marketing and Maintenance of Supplies of Essential Commodities Act**) கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட குற்றவாளிகள் வெளிவந்த பின்பு அவர்கள் செய்த குற்றத்திற்காக குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்கள்.

மேலும், உரிமம் இல்லாமல் கடத்தல் லாரிகளில் ஓட்டுநர்களாக இருந்தால் அத்தகைய ஓட்டுநர்களின் மீது மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் (**Motor Vehicles Act**) கடத்தலுக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களின் உரிமையாளர்களின் மீதும், அரிசி கடத்தல் வழக்குகளில் குற்றவாளிகளின் செயல்களுக்கு பின்னணியாக இருப்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆணையிட்டார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறையின் கூடுதல் காவல் இயக்குநர் திரு. கே. இராதாகிருஷ்ணன், இ.கா.ப., உணவுப்பொருள் வழங்கல் துறையின் ஆணையாளர் திரு. க. இராஜாராமன், இ.ஆ.ப., குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறை தலைவர் திரு.ஆஸிஸ் பாங்கரா, இ.கா.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. சத்ய பிரதா சாகு, இ,ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

************

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9